## வந்தவாசி நகராட்சி

## கூட்டஎண்.1- 2025-2026

## சிறப்புக் கூட்டம்

1920 ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 3வது அட்டவணையில் 2 (3) விதியின் கீழ் இந்நகரமன்றத்தின் சிறப்புக் கூட்டம் 13-05-2025 தேதியன்று செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நகரமன்றத் தலைவர் அவர்கள் தலைமையில் மற்றும் நகரமன்ற துணைத்தலைவர் அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளது. எனவே மேற்படி கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களும், தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**திருக்குறள்:-**

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு".

**விளக்கம்:**

அன்பு இல்லாதவர் எல்லாப்பொருள்களையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வார்: அன்பு உடையவர் தம் உடமையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்

## மன்றப்பொருள்

**01.** அரசாணை (நிலை) எண்.97, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை துறை, நாள் 21.02.2025ன்படி திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் , வந்தவாசி நகர சர்வே வார்டு C. பிளாக்- 31 , நகர புல எண்.82(பழைய புல எண்.13 (பாகம்) , பரப்பு.0.1781.0 ச.மீ பாதை புறம்போக்கு வகைப்பாடுடைய நிலத்தில் 200 சதுரமீட்டர் (2153 சதுரடி ). பத்து ஆண்டுகளுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்துவரும் 4 நபர்களின் ஆக்கிரமிப்புகளை வரன்முறைப்படுத்தும் சிறப்பு திட்டத்தின்கீழ், வரன்முறைபடுத்தி வீட்டுமனை பட்டா வழங்கிட ஏதுவாக மேற்படி 200 சதுரமீட்டர் (2153 சதுரடி ). நிலத்தினை நத்தமாக வகைப்பாடு செய்து முன்மொழிவினை மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களுக்கு, அனுப்ப. மேற்காணும் பொருள் குறித்து நகரமன்ற தீர்மானம் வழங்குமாறு வட்டாட்சியர் வந்தவாசி அவர்களின் கடிதம் ந.க.எண்.ஆ3 / 2902 /2025. நாள்.04 .05 .2025 ல் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | ஆக்கிரமிப்பாளர் பெயர், த/பெ மற்றும் க/பெ | நகரபுல எண். | ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட காலம் |
|---|---|---|---|
| 1 | திருமதி. பூங்காவனம் க /பெ தண்டு மாரி | C/31, T.S.No:82. | 10 ஆண்டுகளுக்கு மேல் |
| 2 | திருமதி. சரண்யா க /பெ மோகன் | C/31, T.S.No:82. | 10 ஆண்டுகளுக்கு மேல் |
| 3 | திருமதி. சரஸ்வதி , க /பெ ஏழுமலை (லேட்) | C/31, T.S.No:82. | 10 ஆண்டுகளுக்கு மேல் |
| 4 | திருமதி. பார்வதி , க /பெ சங்கர் | C/31, T.S.No:82. | 10 ஆண்டுகளுக்கு மேல் |

**அலுவலக குறிப்பு :**

மேற்படி இடம் பாதை புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளதாலும் இவ்விடத்தில் குடியிருப்புகள் உள்ளதால் எதிர்காலத்தில் நகராட்சிக்கு வளர்ச்சி திட்டப் பணிகளை மேற்கொள்ள வழிவகை ஏதும் இல்லை என்பதாலும் வரிசை எண். 1 முதல் 4 வரையிலான 4 பயனாளிகளுக்கு இலவசமாக வீட்டு மனை பட்டாக்களை வழங்குவது தொடர்பாக நகரமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1143 /2025/எப்1)

**(தீர்மானம் எண்.01- நகர மன்ற அனுமதி வழங்கப்படுகிறது)**

நகரமன்றத்தலைவர்

வந்தவாசி நகராட்சி